**நாமக்கல் மாவட்டத்தில் கிராமப்புற பெண்கள் தற்சார்பு நிலையையும், மற்றும் பொருளாதாரத்தில் ஏற்றம் காண வைத்த விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்**

**கோமாதா வழங்கிய எங்கள் குல மாதாவிற்கு நெஞ்சார்ந்த நன்றிகள்**

*******

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்குவதாக தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தார். ஆட்சிப் பொறுப்பிற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவைகள் அனைத்தும் தற்போது திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 5 ஆண்டுகளில் 60,000 கறவை மாடுகள் வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 2011-2012ம் ஆண்டில் கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு 12,000 கறவை மாடுகள் வழங்குவதற்கு ரூ.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகிறது.



16.9.2011 - நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு - மண்டகாபாளையம் ஊராட்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தமிழக அரசின் சிறப்புத்திட்டங்களில் ஒன்றான கறவை மாடுகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் 2011-2012ம் ஆண்டிற்கு 100 கறவை மாடுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு புள்ளாக்கவுண்டம்பட்டி, மண்டகாபாளையம் ஆகிய 2 ஊராட்சிகளைச் சார்ந்த 100 கிராமப்புற ஏழைப்பெண்களுக்கு ரூ.29.94 லட்சம் மதிப்பில் கறவை மாடுகள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் ஆகியோரால் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளை தேர்வு செய்ய கிராம அளவில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் மூலம்தான் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் கிராம சபை ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளில் கூட்டுறவு துறையின் மூலம்

முதலில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு அதில் உறுப்பினர்களாக கறவை மாடுகளை பெறும் பெண்கள் சேர்க்கப்பட்டனர். ரூ.29,000 முதல் ரூ.30,000 மதிப்பிலான விலையுயர்ந்த கலப்பின பசுக்களை பயனாளிகளே கர்நாடக மாநில சந்தைக்கு சென்று தேர்வு செய்தனர். மேலும் அரசின் சார்பில் கறவை மாடுகளுக்கு காப்பீடும் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி கால்நடை மருத்துவர்கள் வாரம் ஒருமுறை கறவை மாடுகள் பெற்றவர்களை நேரில் சந்தித்து கறவை மாடுகளின் உடல்நலம் குறித்து சோதனை செய்கிறார்கள். மேலும் தடுப்பூசி மற்றும் சினை ஊசிகளை போட்டு வருகிறார்கள். கறவை மாடுகளை சிறப்பாக வளர்ப்பது குறித்து ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். கால்நடை மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் இத்திட்டம் செயல்படுவதால் கறவை மாடுகள் ஆரோக்கியத்துடன் அதிக அளவில் பால் கறக்கிறது.

நாமக்கல் மாவட்டம் புள்ளாகவுண்டம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கறவை மாடுகள் பெற்ற ஏழைப்பெண்களின் உணர்வுப்பூர்வமான வாழ்த்துக்கள் இதோ…



எனது பெயர் ஆராயி கணவர் பெயர் ராமன் நாங்கள் இருவரும் தினக்கூலி வேலை தான் செய்து வருகிறோம். தினக்கூலி தொடர்ந்து கிடைக்காது. மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தோம். இந்நிலையில் முதல்வர் அம்மா அவர்களின் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் நான் தேர்வு செய்யப்பட்டேன். இத்திட்டத்தின்கீழ் நானே ரூ.29,000 மதிப்பிலான கறவை மாட்டினை தேர்வு செய்தேன். தற்போது கூலி வேலை கிடைக்காத நிலையில் அம்மா வழங்கிய கறவை மாட்டின் மூலம் பால் கறந்து எங்கள் வாழ்க்கையை சிறப்பானதாக ஆக்கிக்கொண்டோம். கறவை மாடு மூலம் தினசரி 8 லிருந்து 10 லிட்டர் வரை பால் கிடைக்கிறது. இதை சொசைட்டியில் ஊற்றி விடுகிறேன். தினசரி நானே மாட்டினை மேய்ச்சலுக்கு கொண்டு செல்கிறேன். மேய்ச்சலின் மூலம் மாட்டிற்கு பசுந்தீவனம் கிடைக்கிறது. குறைந்த அளவு கலப்பு தீவனத்தை மாட்டிற்கு வழங்கி வருகிறேன். தீவனம் மற்றும் பராமரிப்பு செலவு குறைவாக உள்ளது. இதனால் பாலின் மூலம் கிடைக்கும் வருவாய் மிக அதிகமாக உள்ளது. தன்மூலம் என்னுடைய குடும்ப வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. கோமாதா வழங்கிய எங்கள் குலமாதா முதல்வர் அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து ஏழைகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடவேண்டும்.



எனது பெயர் சாந்தி எனது வீட்டுக்காரர் பெயர் இராஜேந்திரன். நாங்கள் இருவரும் கூலி வேலை செய்து வருகிறோம். எங்களுக்கு 2 மகள் ஒரு மகன் உள்ளனர். கல்லூரியில் படித்து வருகிறார்கள். இவர்களை படிக்க வைக்க கடன் வாங்கி இருந்தேன். கடனை கட்டுவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இந்த சூழ்நிலையில் முதல்வர் அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாட்டினை எனக்கு தந்துள்ளார்கள். கறவை மாடு மூலம் எங்கள் குடும்பத்திற்கு வருவாய் கிடைத்து வருகிறது. கறவை மாட்டை வளர்ப்பது குறித்தும் அதிக அளவில் பால் கறப்பது குறித்தும் கவர்மென்ட் மாட்டு டாக்டர்கள் ஆலோசனை வழங்கி ஊசியெல்லாம் போடுறாங்க. இந்த கறவை மாட்டு பால் வருமானம் எங்கள் மகள், மகன் ஆகியோரின் கல்வி செலவிற்கு பெறும் பயனுள்ளதாக உள்ளது. ஏழையாகிய எங்களின் பிள்ளைகள் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி கடனில்லா வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்த அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றி.



எனது பெயர் செல்வி, கணவன் பெயர் முருகேசன், எங்களுக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர். நாங்கள் இருவரும் கூலி வேலைக்கு சென்றுதான் குடும்பத்தை நடத்தி வருகிறோம். இப்படி இருக்கும் போது அம்மா அவர்களின் கறவை மாடுகள் வழங்கம் திட்டத்தின்கீழ் கறவை மாடு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கறவை மாட்டினை நாங்கள் முறையாக பராமரித்து வருகிறோம். கறவை மாட்டின்மூலம் கிடைக்கும் பாலை சொசைட்டிற்கு ஊத்தி அதன்மூலம் கிடைக்கும் வருவாயில் நாங்கள் குடும்பம் நடத்தி வருகிறோம். ஏழ்மையான நிலையிலிருந்து நாங்கள் குழந்தைகளுக்கு பால் வாங்கிக்கொடுக்க முடியாக சூழ்நிலையில் இருந்தோம். தற்போது அம்மா வழங்கிய

மாட்டின் மூலம் கிடைக்கும் பாலை எங்கள் குழந்தைகளுக்கும் கொடுத்து வருகிறோம். இதன் மூலம் குழந்தைகள் ஆரோக்கியமாக உள்ளனர். எந்த வித சொத்தும் இல்லாமல் இருந்த எனக்கு அம்மா வழங்கிய கறவை மாடு எங்களுக்கு சொத்தாக உள்ளது. புராணக் கதைகள் மற்றும் மன்னர்கள் ஆட்சிக்காலத்தில்தான் காராம்பசுக்கள் தானம் வழங்கியதாக கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்று மக்களாட்சியில் அம்மா அவர்கள் ஏழை பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்கி புராணக்கதைகளை மிஞ்சி ஏழைப்பெண்களை பாதுகாக்கும் காவல் தெய்வமாக திகழ்கிறார். அம்மா அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

நாமக்கல் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுவதால் இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற பெண்களிடையே தற்சார்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கிராமப்புற ஏழைப்பெண்களின் வாழ்க்கை பொருளாதாரத்தில் ஏற்றத்தை உருவாக்கி உள்ளது என்றால் அது மிகையல்ல.

தொகுப்பு
ஜெ.சௌந்தர பாண்டியன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.